பல்லவர் எத்தனை பல்லவர்!

Written by - சேசாத்திரி -
Thursday, 14 June 2018 03:53 - Last Updated Thursday, 14 June 2018 03:59

பல்லவர் வேந்தராக ஆட்சி புரிந்து வீழ்ந்த பின்னும் அவர்கள் இரண்டாம் அதிகார நிலை மன்னர்களாக தொண்டை மண்டலத்தின் சில இடங்களில் ஒரே காலத்தில் ஆண்டுள்ளனர். குறிப்பாக காடுவெட்டி பல்லவன் நல்லசித்தன், காடுவெட்டி கோப்பெருஞ்சிங்கர், தொண்டைமான்கள், கண்ட கோபாலன் என்போர். இவர்கள் 3 -ஆம் குலோத்துங்கன் காலத்தில் அவனுக்கு கீழ்ப்படிந்து ஆட்சிபுரிந்துள்ளனர். கோப்பெருஞ் சிங்கனும், கண்ட கோபாலனும் சோழர் வீழ்ச்சிக்கு பின் வேந்தர்களாகி விட்டனர். நான்காம் அதிகார நிலையான நாடு கிழவன் நிலையிலும் புழல் கோட்டத்தில் அடங்கிய நாடு ஒன்றுக்கு கருமாணிக்கப் பல்லவரையன் இருந்துள்ளான். இப்படி நான்கு அதிகார நிலையிலும் பல்லவர் இருந்துள்ளனர். இனி நல்லசித்த மகாராசன் பற்றிய கல்வெட்டு கீழே:

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநசக்கரவத்திகள் ஸ்ரீ விசையகண்ட கோபால தேவர்க்கு யாண்டு 17 [ஆவது] கற்கடக நாயற்று பூப் பக்ஷத்து தசமியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற உத்திராட[த்]து நாள் செயங்கொண்ட சோழ ம / ண்டலத்து எயிற்க்கோட்டத்து நகரம் காஞ்சிபுரத்து திருவத்தியூர் நின்றருளின அருளாளப் பெருமாளுக்கு அநேகபூண்தை மஹாராஜாதிராஜ பரமேஸ்வர பரமவம் ஸோக்பவ ---- சமஸ்கிரித வரிகள் - - - -/ விஜயாதித்ய முக்க [ண்டி] காடுவெட்டி வம்சாவதார - - - - தானவமுராரி - - - - ராஹுத்தராய நல்லசித்தராஸநேந் வைத்த பெருமாளுக்கு வைத்த திருநன்தா விளக்கு ரு (5) ம் பெரியபிராட்டியார்க்கு வை / த்த திநுநன்தா விளக்கு ரு (5) ம் ஆக விளக்கு ய (10) ம் இவ்விளக்கு பத்துக்கும் விட்ட பால்பசுவும் கன்றுப்பசுவும் பொலிமுறை நாகும் உள்பட உரு 300 ம் இஷபம் [30] ஆக உரு 330 ம் இவ்உரு முன்னூற்று மு[ப்]பதும் இவ்வாண்டின் / ஆடிமாத முதல் நாள் ஒன்றுக்கு அரியென்ன வல்லான் நாழியால் அளக்கும் நெய் இருநாழி உரியும் மதுவற்கத்துக்கு அளக்கும் தயிர் அமுது குறுணி இருநாழியும் திருநாள் தேவைகளும் கோயில் தேவைகளும் / - - - - சந்திராதித்ய வரை செலுத்தக் கடவோமாக கைக்கொண்டோம் கரண[த்]தோம் இவ்விளக்கு கைக்கொண்டான் திருவிளக்கு குடிகள் - - - -க்கோன் செங்கழுநீரான துவாரபதிவேளான் / கைக்கொண்ட விளக்கு ரு (5) ம் இவன் உள்ளிட்டார் கைக்கொண்ட விளக்கு ரு (5) ம் ஆக விளக்கு ய (10) ம் இவ்விளக்கு பத்தும் கைக்கொண்டமைக்கு இப்படிக்கு இவை கோயிற்[க்]கணக்கு உத்தரன் மேருருடையான் திரு / புவன சோழனான ஆனைமே[ல்] அழகியான் எழுத்து.

விளக்கம்: முக்கண்டி காடுவெட்டி குடும்பத்தவன், பல்லவகுலத்திலகம், பாரத்வாஜ

1 / 4

கோத ்திரத ்தை சார ்ந ்தவன ் என க ுறிக ்கொண ்டு நல ்லசித ்தரசன ் அருளாளப ் பெருமாளுக ்கு (வரதராசர ்) 5 விளக ்கும ், பெருந ்தேவித ் தாயாரான பெரிய பிராட ்டிக ்கு 5 விளக ்கும ் திருநந ்தா விளக ்கு வகைக ்க 300 பசுவும ் 30 காளையையும ் ஆக 330 மாடுகளை அளித ்துள ்ளான ். இம ்மாடுகள ் வாயிலாக பெறப ்படும ் நெய ்யில ் அரியனெ ்னவல ்லான ் நாழியால ் இருநாழியும ், தயிர ் சோறு கறுணி இருநாழியும ் நாள ்தோறும ்,, திருவிழா நாள ்க;ளிலும ் வழங ்கிட வழிவகை செய ்துள ்ளான ்.

கல ்வெட ்டில ் இக ்காலத ்தில ் உள ்ளது போல அக ்காலத ்தியேும ் எண ்களை சொல ்லாகவும ், எண ் குறியாகவும ் எழுதி உள ்ளனர ். விளக ்கை கைக ்கொண ்டது வேளாளர ்கள ் என ்பது கோயில ் கரணத ்தவர ்களாக வேளாளர ்கள ் இருந ்துள ்ளனர ் என ்பதை காட ்டுகிறது.. இரண ்டாம ் தொகுதி நூலில ் அதிக பசுக ்களை ஈந ்தவன ் இந ்த நல ்லசித ்தரசன ் தான ். எனக ்கு உள ்ள ஐயம ் யாதெனில ். இவ ்வளவு பெருந ்தொகை பசுக ்களில ் இருந ்து வரும ் பேரளவு நெய ் விளக ்கு எரிக ்கவா? என ்பது தான ். இது எதோ வேள ்வி, ஓமமாக இருக ்குமோ?

(காஞ ்சிபுரம ் மாவட ்ட கல ்வெட ்டுகள ் தொகுதி 2, 2011,பக ்கம ் 277-278)

200 தேவரடியாளுக ்கு 3 -ஆம ் குலோத ்துங ்கன ் நிலம ் ஒதுக ்க ஆணை இட ்ட போது அதை ஆதரித ்து நல ்லசித ்தரசன ், தொண ்டைமான ் வழிமொழிந ்து கையெழுத ்திட ்டனர ் . அந ்த கல ்வெட ்டு கீ ழே:

 ஸ ்வஸ ்தி ஸ ்ரீ திரிபுவன சக ்கரவத ்திகள ் மதுரையையும ் ஈழமும ் கருவ ூரும ் பாண ்டியன ் முடி / த ்தலையும ் கொண ்டு வீ ரர ் அபிஷேகமும ் விஜயெர ் அவிஷேகமும ் பண ்ணி அருளின திரிபுவனவீ / ரதேவேற ்கு யாண ்டு 34 ஆவது திருமுகப ்படி திரிபுவன சக ்ரவத ்திகள ் கோநேரின ்மை கொண ்டான ் / ஜயங ்கொண ்ட சோழமண ்டலத ்து அத ்தியூ ர ் அருளாளப ்பெருமாள ் கோயில ் வயிஷ ்ணவக ்கண ்காணி / செய ்வார ்களுக ்கு இவ ்வாழ ்வாரசை ் சேவிக ்கைக ்கு திரிபுவனவீ ரந ் பதியிலாரனெ ்று இருநூ ்று பேர ்முத / ல ்[கொ]ள ்ளவும ் இவர ்களுக ்கு இவ ்வாழ ்வார ் திருமடவிளாகத ்திலே மனை இடவும ் தேவதானமாக ஊர ் / களில ் எயிற ்கோட ்டத ்து சிறுகச ்சிப ்பேடு நீ ங ்கல ் நீ க ்கி நிலம ் இருநூ ்ற ்று நாற [ப]த ்திரண ்டரையும ் நிலச ்சீ விதமா / க அடைக ்கவும ் கடவைதாகப ் பெறவேணுமனெ ்று நந ்திபன ்மன ் நமக ்குச ் சொல ்லிவரக ் காட ்டினவாரே இப ் / படிசெய ்யக ் கடவதாகச ் சொன ்னோம ் இப ்படி செய ்யப ்பண ்ணுக எழுதினான ் திருமந ்திரஓலை மீ னவன ் மூ / வேந ்தவேளோன ் இவை வில ்லவராயனெழுத ்து இவை விழிஞத ்தரையைனெழுத ்து இவை சிங ்களராயனெழுத ்து இவை சித ்தராயனெழுத ்து / இவை சேதிகுலராயனெழுத ்து இவை சிங ்களராயனெழுத ்து இவை மூ வேந ்தரயைனெழுத ்து யாண ்டு 35 னா / ன ் வாரு இவை தொண ்டைமானெழுத ்து.

சோழர ், பாண ்டியர ், சேரர ், சம ்புவராயர ் ஆகியன எப ்படி ஒரு ஆள ்குடிப ் பெயரோ அப ்படிப ்பட ்ட ஒரு ஆள ்குடிப ் பெயர ் தான ் கண ்டகோபாலன ் என ்பதும ். இவர ்கள ் பொதுவாக தெலுங ்கு சோழர ் என ்று அறியப ்பட ்டாலும ் கீ ழ ்வரும ் கல ்வெட ்டு இவர ்களை பல ்லவர ் என ்றே அறிமுகப ்படுத ்துகிறது. அதில ் பல ்லவர ்கள ் பார ்த ்தியர ் (Parthiyans) பாரத ்துவாஜ கோத ்திரத ்தார ் என ்று கு றிக ்கிடக ்கிறது. தெலுங ்கு பல ்லவர ்களான இவர ்களில ் திருக ்காளத ்திதேவேன ் கண ்டகோபாலன ், விஜய கண ்டகோபாலன ், வீ ர கண ்டகோபாலன ் என ்போர ் சிலர ். இவர ்கள ் சோழருக ்கு அடங ்கினமையாலயே சோழன ் என ்ற பெயரகை ் கொண ்டதாகத ் தெரிகிறது. இனி கல ்வெட ்டு பாடம ்:

பல்லவர் எத்தனை பல்லவர்!

Written by - சேசாத்திரி -
Thursday, 14 June 2018 03:53 - Last Updated Thursday, 14 June 2018 03:59

ஸ்வஸ்திஸ்ரீ பார்த்தியர் தம்மிற் பாரத்துவாரக் கோத்திரம் விளக்க [யி] - - - / லைமகள் வயிற்றில் நிலைபெறத் தோன்றி மெய்ம்மொழி நாள் முத - - - / ணன் மாமகன்துய்ய மாதவத்தின் தராதலங்கு காக்கந் தன்மையனாகி - - - / [ப்] பல்லவர் திருக்குலத் திசைதோறும் விளக்கும் விசையபூபதி கா -- - - / - - அருளாள நாதனருள் பெரியவன் திருபுவன சக்கரவத்திகள் ஸ்ரீ வீர கண்ட - - - / டு ச (4) வது முதல் திருவத்தியூர் நின்றருளிய அருளாளப்பெருமாள் கோயிலில் - - - / மக்க[ளை]க் கோயிலில் [அ]ந்தராயபேறு கொள்ளுங் கடமை உள்ளிட்ட - - - / - - றாகச் சந்திராதித்த வரை திருநந்தாவிளக்கும் நெய்யமுது தையிரமுது - - - / திருநாள் தேவைகளும் இவருளாளப் பெருமாளுக்குச் செலுத்தக் கடவ - - -/ ரோதம் பண்ணினவன் கெங்கைக்கரையில் காராம்பசுவை வதித்தான் - - - .

விளக்கம்: கல்வெட்டின் வலது ஓரம் சிதைந்துள்ளதால் முழு விளக்கம் பெறமுடியவில்லை. கல்வெட்டு வீர கண்டகோபாலனின் 4 ஆவது ஆட்சி ஆண்டில் வெட்டப்பட்டு அவனது மெய்கீர்த்தியை முதலில் கூறுமிடத்து அவனை பார்த்தியன், பல்லவர் குலத்தவன் என்கிறது. நந்தா விளக்கு எரிக்கவும் தயிரமுது நெய்யமுது ஆகியன திருநாள்களில் தரப்பட வேண்டும் என்று குறிக்கிறது..

பார்த்தியர் என்போர் மேலை ஆசியாவில், ஈரானில் ஆட்சி புரிந்த ஆரிய மன்னர் ஆவர். இவர்கள் மௌரியர் ஆட்சித் தொடக்கத்தில் இந்தியா வந்து ஆந்திரத்தில் ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டு பின்பு காஞ்சியை ஆளத்தொடங்கியவர்கள். அது தொடர்பான சில ஆய்வுத் தொடுப்புகள்
http://www.thehindu.com/ todays-paper/tp-features/tp- metroplus/The-Pallavas-and-the-Pahlavas/article15376550. ece
http://www.cais-so as.com/CAIS/History/ashkanian/ parthian_colony.htm

தொண்டைமான் மனைவி கல்வெட்டில் இருந்து இந்தப் பல்லவர்கள் தொண்டை நாட்டில் வேளாள மக்களில் கலந்து விட்டதாகத் தெரிகிறது. இன்று இவர்கள் துளுவ வேளாள மக்கள் ஆவர்.

ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு நாற்பத்துமூந்று ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்து திருவத்தி / யூராழ்[வா]ர்க்கு சோழமண்டலத்துக் குலோத்துங்க சோழவள நாட்டு திருநறையூர் நாட்டு வண்டாழஞ்சேரி உடையான் வேளாண் கருணாகரநாந தொண்டைமானார் / தேவியார் அழகிய மணவாளனி மண்டையாழ்வார் வைத்த திருநுந்தா விளக்கு.

நூல்: காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள், 2011, தொகுதி 2, எண் :5, பக் - 10, காஞ்சி வரதர் (அருளாள பெருமாள்) கோயில்

அதே நேரம், கோப்பெருஞ்சிங்கர் வழிவந்தோம் என்று வன்னியரும் கூறிக்கொள்கின்றனர். அத்தனை வன்னிய உட்பிரிவு சாதிகளும் பல்லவர் என்று கூற முடியாவிட்டாலும் படையாட்சிகளும் வன்னிய ரெட்டியாரும் இதில் அடங்கத் தகுதிஉடையவர். ஏனென்றால் இவர்கள் நிலக் கிழார்கள். காஞ்சிபுரம் அருளாளர் (வரதராஜ)பெருமாள் கோயிலில் உள்ள 360 கல்வெட்டுகளில் இந்த 4 நான்கு கல்வெட்டுகள் பல்லவர் பற்றி அறிய உதவுவது போல நெல்லூர் முதல் தென்பெண்ணை ஆறு வரை உள்ள தொண்டைமண்டலக் கோயில்களில் உள்ள அத்தனை கல்வெட்டுகளையும் தொகுத்து ஆராய்ந்தால் பல்லவர் குறித்து மேலும் அதிக

3 / 4

பல்லவர் எத்தனை பல்லவர்!

Written by - சேசாத்திரி -
Thursday, 14 June 2018 03:53 - Last Updated Thursday, 14 June 2018 03:59

சான்றுகள் கிட்டும்.

sseshadri27@gmail.com

4 / 4